# படைப்பாளனான அல்லாஹ் மனித இனத்திற்கு இறை விசுவாசம், இறை மறுப்பு விவகாரத்தில் தெரிவுரிமை விருப்பை அளித்தது ஏன்?

"சத்தியம் உங்களின் இரட்சகனிடமிருந்தே வந்துள்ளது. ஆகவே விரும்பியவர் நம்பிக்கை கொள்ளட்டும், விரும்பியவர் நிராகரிக்கட்டும் என்று கூறுவீராக". (அல் கஹ்ப் : 29). تقدم

படைப்பாளனான அல்லாஹ்வுக்கு எம்மை அவனுக்கு கட்டுப்பட்டு நடக்கவும், வணங்கிவழிபடவும் நிர்ப்பந்திக்க முடியும். என்றாலும் நிர்ப்பந்தித்தல் மனித படைப்பின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்துகொள்ள வழிவகுக்காது.

ஆக,தெய்வீக ஞானம், ஆதமை படைத்ததிலும், அறிவால் அவரை தனித்துவப்படுத்துவதிலும் பிரதிபலிக்கிறது.

"இன்னும் அவன் ஆதமுக்கு அனைத்துப்பெயர்களையும் கற்றுக் கொடுத்தான், பின்னர் அவற்றை வானவர்களுக்கு எடுத்துக்காட்டி,' நீங்கள் உண்மையாளரகாக இருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கறிவியுங்கள் (எனக் கூறினான்)". (அல்பகரா : 31). تقدم

அத்துடன் தெரிவு செய்வதற்கான திறனை அவருக்களித்தான்.

"ஆதமே! நீரும் உம் மனைவியும் இச்சுவர்க்கத்தில் குடியிருங்கள். மேலும், நீங்கள் இருவரும் விரும்பியவாறு தாராளமாக அதிலிருந்து புசியுங்கள். ஆனால் நீங்கள் இருவரும் இம்மரத்தை நெருங்க வேண்டாம். அவ்வாறெனில் நீங்கள் இருவரும் அநியாயக்காரர்களில் ஆகிவிடுவீர்கள்' என்றும் நாம் கூறினோம்".(அல்பகரா: 35). تقدم

தேர்வில் ஒருவருக்கு தவறு, பிழை, பாவம் ஆகியவை ஏதோ வகையில் ஏற்படும் என்பதினால் அவருக்கு தவ்பா மற்றும் பிரயச்சித்தத்திற்கான வாயில்களை திறந்து கொடுத்தான்.

"பின்னர் ஆதம் தனது இரட்சகனிடமிருந்து சில வார்த்தைகளைப் பெற்று அதன் மூலம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதனால் அவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனுமாவான்". (அல் பகரா : 37). تقدم

அல்லாஹ் ஆதமை இந்தப் பூமியின் கலீபாவாக (தலைமுறையாக) இருக்க வேண்டுமென விரும்பினான்.

"(நபியே) இன்னும் உமது இரட்சகன் வானவர்களிடம் 'நிச்சயமாக பூமியில் நான் ஒரு

தலைமுறையை தோற்றுவிக்கப்போகின்றேன்' என்று கூறியபோது: நாம் உம் புகழைத் துதித்துக்கொண்டும், உன்னைத் தூய்மைப்படுத்திக்கொண்டுமிருக்க, அதில் குழப்பத்தை விளைவித்து இரத்தங்களை சிந்துவோரையா தோற்றுவிக்கப்போகின்றாய் ? என்று அவர்கள் கூறினார்கள். அதற்கவன் நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் நன்கறிவேன் எனக் கூறினான். (பகரா : 30). تقدم

ஆகவே தெரிவுரிமைக்கான நாட்டம் (விருப்பம்) மற்றும் ஆற்றலானது அதனை சரியான வடிவிலும் முறையிலும் பயன்படுத்தப்பட்டால் உண்மையில் அது ஒரு அருளாக அமைவதுடன் மோசமாகவும் முறைகேடான நோக்கங்கங்களுக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டால்; (சாபமாகவும்) மருளாகவும் அமைந்து விடும்.

உண்மையில் மனிதனுக்கு வழங்கப்பட்ட விருப்பும், தெரிவும் அபாயம், சிக்கல், கடும் சவால் மற்றும் உளப்போராட்டம் நிறைந்தவைகளாக உள்ளன. இது போலியான மகிழ்சிக்கு வழிவகுக்கும். அடிமைத்தனத்திலிருந்து காத்து மனிதனுக்கு மிகவும் உயர் அந்தஸ்த்தையும், கண்ணியத்தையும் வழங்கும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

"நம்பிக்கையாளர்களில் உரிய காரணமின்றி (போரில் கலந்து கொள்ளாது) தங்கியிருப்போர்களும், தமது செல்வங்களாலும், தமது உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவோரும் சமமாக மாட்டார்கள். தமது செல்வங்களாலும் தமது உயிர்களாலும் அறப்போர் புரிவோரை (போருக்குச் செல்லாது) தங்கியிருப்போரை விட அல்லாஹ் அந்தஸ்தால் சிறப்பாக்கி வைத்துள்ளான். அனைவருக்கும் அல்லாஹ் நல்லதையே வாக்களித்துள்ளான். இன்னும் (போருக்குச் செல்லாது) தங்கியிருப்போரை விட அறப்போர் புரிவோரை மகத்தான கூலியால் அல்லாஹ் சிறப்பாக்கி வைத்துள்ளான்.(அந்நிஸா : 95). تقدم

வெகுமதியை பெறுவதற்கான தெரிவு எமக்கு இல்லையெனில் கூலி மற்றும் தண்டனையின் பயன் என்ன?

மேற்கண்ட அனைத்தும் உண்மையில், இவ்வுலகில் மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட தெரிவுரிமையின் பரப்பானது வரையறுக்கப்பட்டதாகும் என்பதை புரிந்து கொள்ளவதுடனேயே அமைகின்றது. எமக்களித்த தெரிவுச் சுதந்திரத்திற்கு மாத்திரமே அல்லாஹ் எம்மை மறுமையில் விசாரிப்பான். ஆகவே நாம் வளர்ந்த சூழ்நிலைகள் மற்றும் ,சூழல் ஆகியவற்றில் எமக்கான எவ்வித தெரிவும் கிடையாது. இது நாம் எமது பெற்றோரை நாம் எப்படி தெரிவு செய்வில்லையோ, அதே போல் எமது தோற்றங்கள் மற்றும் நிறங்களை தெரிவு செய்வதில்; - வர்ணங்களில்- ஆதிக்கம் செலுத்துவதற்கான எவ்வித அதிகாரத்தையும் நாம் எப்படி பெறவில்லையோ அதனை ஒத்த விடயமாக உள்ளது.

இஸ்லாம் குறித்த கேள்வி பதில்

Source: https://mawthuq.net/demo/qa/ta/show/10/

Arabic Source: https://mawthuq.net/demo/qa/ar/show/10/

Tuesday 5th of May 2026 07:09:37 AM